ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

इदानीमस्मादृग्जननिवहसन्त्राणविषये
कृताविर्भावस्य प्रथितभवदीयांशकजुषः ।
कृपा सापि प्राप्ता भुवनगुरुराजस्य महिता
तथापि श्रीशम्भो त्यजति भवबन्धस्स च न माम् ॥ १९ ॥

இதானீமஸ்மாத்ருக்ஜநநிவஹஸந்த்ராணவிஷயே
க்ருதாவிர்பாவஸ்ய ப்ரதிதபவதீயாம்ஶகஜுஷ: ।
க்ருபா ஸாபி ப்ராப்தா புவநகுருராஜஸ்ய மஹிதா
ததாபி ஸ்ரீஶம்போ த்யஜதி பவபந்தஸ்ஸ ச ந மாம் ॥௧௯॥

ஸ்ரீசம்போ! ஸ்கல உலகங்களுக்கும் க்ஷேமத்தைக்கொடுக்கும் சக்திவாய்ந்த ஹே சங்கரா! தற்காலம் என்போன்ற ஜன ஸமூஹங்களைப் பாதுகார்க்க வேண்டி இப்புவியில் தோன்றியவரும் தங்களுடைய அம்சாவதாரமாயும் விளங்கும் ஸ்ரீ ஜகத்குருசங்கரபகவத்பாதாசார்யாளுடையதும் ஸகலஜனங்களாலும் போற்றக்கூடிய மஹிமை பெற்றதும் மிகவும் பிரசித்தியுடன் கூடியதுமான கிருபையானது முற்பிறவியில் செய்த புண்ணியவசத்தால் அடையப் பட்டிருக்கின்றது. அவ்விதமடைந்தும் எவ்வித துக்கத்திற்கும் முக்கிய காரணமான இந்த ஸம்ஸாரபந்தமானது என்னை விடவில்லை.

ஸம்ஸாரதுக்கத்திலிருந்தும் விலகவேண்டுமென்கிற எண்ணங்கொண்ட ஒரு பக்தர் ஸ்ரீ பரமேசுவரனிடம் ஸ்வாமின் இச்சமயம் எம்போன்ற ஜனங்களைப் பாதுகார்ப்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு அவனியில் அவதரித்து விளங்கும் தங்களுடைய அம்சாவதாரமான ஸ்ரீ ஜகத்குரு மஹாசுவாமிகளுடைய சிறந்த அனுக்ரஹம் எற்பட்டும் ஸம்ஸாரபந்தமானது என்னைவிட்டு விலகவில்லை. ஆகையால் பரிபூர்ண ஸ்வரூபமாய் எங்கும் நிறைந்து பிரகாசிக்கும் தங்களுடைய அனுக்ரஹத்திற்கும் அடியேனைப் பாத்திரனாகச் செய்து இந்த பந்தத்தை அறவே அறுத்துஎன்னை தன்யனாகச் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்,

4-68

# ஆர்யதர்மம்.

விபவ-ஸூ புரட்டாசி-மீ ௧௯௨

## ஐயவினு.

(423-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸம்வர்த்தரென்ற மஹரிஷியும் சண்டாளன் பதிதன் இவர்களுடைய நிழலைத்தொட்டால் ஸ்னனம் செய்யவேண்டுமென்று வெளியிடுகிறார்.

பிரஜாபதி என்பவர்:— ஒருவன் சிராத்தம் முதலிய பிதிரு கர்மாவைச் செய்து அச்சமயத்தில் சண்டாளன், பிரேதம், பஹிஷ்டாஸ்திரீகள், முதலியவர்களை அறியாமல் தீண்டினல் மூன்று தினம் உபவாஸமும், தெரிந்தே தீண்டினல் ஸாந்தபனம் என்கிற விரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று கூறுகிறார்.

சண்டாளனைப் பார்த்தால் சூரியன், சந்திரன், அக்கிமுதலிய தேஜஸைப் பார்க்க வேணுமென்றும், அவனுடன் வியவகாரம் செய்தால் உடனே பிராமணர்களுடன் சம்பாஷணை செய்யவேண்டுமென்றும் சண்டாளனை ஸ்பரிசித்தால் வஸ்திரத்துடன் ஸ்னனம் செய்யவேண்டுமென்றும், போதாயனர் தெரிவிக்கிறார். இக்கருத்தையே பராசரரும் நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறார்.

விருத்தஹாரித ஸ்மிருதியில் சண்டாளனுகிலும், பதிதனுகிலும் நான்கு வருணத்தார்களுடைய கிரஹத்தில் எந்தக் கிரஹத்தில் பிரவேசித்தாலும் அவ்வீட்டிலுள்ள மட்பாண்டங்களை விலக்கி எறிந்துவிட்டு மூன்று தினங்கள் அவ்வீட்டில் பசுக்களைக் கட்டிய பிறகுதான் சுத்தியாகிறதென்று 9-வது அத்தியாயம் 420 வது சுலோகத்தில் கூறியிருக்கிறது.

இவ்விதம் வியாக்கிரர், விஷ்ணு, விருத்த யாக்ஞவல்கியர், ஹாரீதர், ஆபஸ்தம்பர், ஸுமந்து, சாதாதபர், வியாஸர், வேதவ்யாஸர், யமன், லகு ஆசுவலாயனர், வஸிஷ்டர், அத்ரி முதலான பல

மஹரிஷிகளும் இவ்விஷயத்தில் மிக விரிவாக இன்னும் பல நிய மங்களையும் கூறியிருப்பினும் அறிஞர்களுக்கு இம்மட்டோடு போதும் எனக்கருதி விரிவிற்கஞ்சி விடுத்தனம்.

இவ்விதம் ஹிந்துக்களால் முக்கியப் பிரமாணமாகக் கருதப் படும் பல ஸ்மிருதிகள் ஏகாபிப்பிராயமாய் தீண்டாமை அவசியம் வேண்டுமென வற்புறுத்துங்கால் இதை விலக்க வேண்டுமெ ன்று இந்து சாஸ்திரங்களின் அபிப்பிராயமென்று கனம் மாள வ்யா அவர்கள் கூறியதின் கருத்து எமக்கு நன்கு புலப்படவில்லை

பின்னும் புராணம், இதிஹாஸம் முதலியவைகளின் அபிப் பிராயங்களும் இவ்விஷயத்தில் எவ்விதமிருக்கிறதென்று சற்று ஆராய்வோம்.

ஸ்ரீமத் இராமாயணத்தில் பாலகாண்டத்தில் கதிரவன் குலத் திற்றோன்றிய திரிசங்குவெனப் பெயர் வாய்ந்த ஓர் வேந்தன் தனது ஸ்தூல சரீரத்துடன் தேவபாவத்தை அடையவேண்டி, தன் குலகுருவான வஸிஷ்டரை அனேக வந்தனங்களுடன் மிகப் பலவாறாக வேண்டியும் அவர் உடன்படவில்லை.

உடனே அவர்களுடைய புதல்வர்களிடம் சென்று விஷயங் களை அறிவித்துத்தாங்கள் என் இஷ்டத்தைப்பூர்த்தி செய்விக்க வேண்டுமென்று அவ்வரசன் கேழ்க்குங்கால் வஸிஷ்ட புத்திரர்க ளால் சபிக்கப்பட்டு சண்டாளனாய் மாறினனென்பது எல்லோரும் அறிந்த விஷயமே.

இவ்விதம் சாபத்தால் சண்டாளத் தன்மை வாய்ந்த அவ் வேந்தர் கறுப்பு வஸ்திரம் தரித்தவராயும், கறுப்பு மேனியுடைய வராயும், மிக பயங்கரமாயும், தலைவிரித்தவராயும், சிதையிலுள்ள மாலைகளாலும், சந்தனாதிகளாலும் அலங்கரிக்கப்பட்டவராயும், இரும்பு ஆபரணம் தரித்தவராயும் ஆகிவிட்டார். அவ்வித சண் டாள ரூபத்தை அடைந்த கோரமான அவரைப்பார்த்தவுடன் எல்லாமந்திரிகளும் அவரை விட்டு விலகினர்கள். அவர்கூட யிருந்த நகரவாஸிகளும் வேகமாய் வெளியில் ஓடிவிட்டார்கள். இவ்வபிப்பிராயத்தையே தேவீபாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தி லும் மிக விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கிறது.

கனம் மாளவ்யா அவர்களும், அவர்களைப் பின்பற்றியவர்க ளும் கருதுகிறபடி தீண்டாதவர்களென்று ஒரு ஜாதியில்லையென்

பது உண்மையாயிருந்தால் மந்திரிகளும் மற்றுமுள்ளோர்களும் வெகு காலமாகக் கூடவே இருந்து பழகிய ஆசனேவிட்டு விலகி ஏன் ஓடவேண்டும். இதையும் முற்காலத்திலிருந்த கெட்ட எண்ணங்கொண்ட பிராமணர்கள் எழுதி ராமாயணத்தில் சேர்த்துவிட்டார்கள் என்று ஒருஸமயம் கூற முன் வந்தாலும் வரலாம். இவர்களிடத்தில் அவர்களுக்குக் கெட்ட எண்ணம்ஏற்படுவதற்குயாது காரணம். பற்பல ஜாதிகள் நிறைந்த இவ்வுலகில் இதர ஜாதிகளை விட்டு அகாரணமாய் ஒருவர் பேரில் தப்பான அபிப்பிராயத்தை வெளியிட அற்ப அறிவுள்ளஎவனும் முன் வரமாட்டான். அப்படி யாராவது ஒரு முட்டாள் இருந்தாலும் கோபத்தால் இரண்டொரு வார்த்தைகளை மாத்திரம் ஒரு ஸமயம் தவருக வெளியிடுவனேயல்லாமல் மஹானுன ஸ்ரீ வால்மீகி மஹரிஷியால் லோகோபகாரத்தின்பொருட்டு வெளியிடப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் இவ்விதம் சேர்த்து வெளியிட எங்ஙனம் ஸாத்தியமாகும்.

சாஸ்திரங்களிலிருக்கும் வசனங்களுக்கு ஸரியானபடிபொருளையொத்துக்கொண்டால் தங்கள் ஸித்தாந்தத்திற்கு ஆதாரமில்லாமல் போகிறதென்று தப்பான ஒரு அதர்மத்தை ஸ்தாபிக்க வேண்டி பிறர்பேரில் அனுவச்யமாகக் குறைகூற முன் வருவது எங்ஙனம் பொருந்தும். இரண்டுமாதத்திற்கு முன் பிரஸித்தி பெற்ற ஒருவர் மனுஸ்மிருதியில் தென்தேயத்துப் பிராமணர்கள் சில தப்பான வசனங்களைச் சேர்த்திருப்பதாக தம் ஞானதிருஷ்டியால் அறிந்திருப்பதாக மித்திரனில் அறிவித்திருக்கிருர் அந்தோ கலியின் கொடுமை.

(இன்னும்வரும்)

உபபத்திராதிபர்.

# இந்துதர்மபரிபாலன ஸபை.

(429-வது பக்கத்தொடர்ச்சி)

கால ஆசாரத்திற்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு ஸ்மிருதிகள் மாறிக்கொண்டேவரும். வேதவாக்கியங்கள்தான் என்றும் மாருதவை என்கிருர். இதை எந்த ஆஸ்திகனுவது ஏற்பானு?

சுருதிகளின் அர்த்தத்தைத்தான் ஸ்மிருதிகள் கூறும். சுருதியின் அர்த்தத்திற்கு விபரீதமான ஸமிருதி தள்ளுபடி என்று நம் கொள்கை. இப்படியிருக்க காலத்திற்கேற்ப ஸ்மிருதிகள் மாறிக் கொண்டேபோனால் மாறாத வேதவாக்கியங்களை இவை எப்படி ஒத்துநிற்கும்? ஆகவே ஒருபோதும் சுருதியை மாறி ஸ்மிருதிகள் நிற்கமாட்டா. இவ்விஷயத்தைக் காளிதாஸன் குழந்தைப் பர்வத்திலேயே கற்பித்துவிட எண்ணங்கொண்டே நந்தினீ என்ற பசுவை திலீபன் பின்தொடர்ந்ததற்கு

**स्मृतेरिवार्थं स्मृतिरन्वगच्छत्** ஶ்ருதேரிவார்த²ம் ஸ்ம்ருதிரந்வக³ச்ச²த் ।

சுருதியின் அர்த்தத்தை ஸ்மிருதி தொடர்ந்ததுபோல் என்று உவமை கொடுத்தான். இங்குள்ள அழகு இது. வஸிஷ்டர் நந்தினியின் அனுக்ரஹத்திற்காக அதனைப் பின்தொடர்ந்துபோவென திலீபனைக் கட்டளையிட்டார். அவனும் அப்படியே; அது நின்றால் நிற்பதும், போனால் போவதும், படுத்தால் படுப்பதும் இம்மாதிரியெல்லாம் அதன் இஷ்டத்தை அனுஸரித்தே நடந்தானும். இதை எவ்விதமிருக்கிறதென்று விளக்க மிகப்பிரஸித்தமான **श्रुतेरिवार्थं** ஶ்ருதேரிவார்த²ம் என்ற வாக்கியத்தாற் காட்டினான். ஆகவே ஸ்மிருதிகளுக்கு ஸ்வாதந்திரியமே கிடையாவென்பது தெற்றெனவிளங்கும்போது காலத்திற்குத் தக்கவாறு மாறினால் அது ஸ்மிருதியாகுமோ; விஸ்மிருதியென்றுதானாகும். வார்ஸ் பாத்யதையை மாற்றலாமென்றால் விவாஹமுறையைப் பற்றிக்கூறும் ஸ்மிருதிகளும் மாற்றப்படலாமென்பது சுலபமாக யாவரும் அறிந்துகொள்ளலாம் என்கிறார்.

வார்ஸ் பாத்தியதையை மாற்றலாமென்று யார் உத்தாவு கொடுத்தது. இஷ்டப்படி சட்டஸபையில் மாற்றினால் இஷ்டப்படி விவாஹஸ்மிருதிகளை மாற்றவே செய்வார்கள். விவாஹமே வேண்டாமென்பார்கள், செய்த விவாஹத்தை ரத்துசெய்யலாமென்பார்கள், அறுத்த விவாஹத்தைக் கட்டிமுடிப்பார்கள். அளவுகடந்ததற்கு எல்லையேது?

விவாஹத்திற்கும் ஆன்மசுத்திக்கும் ஒருவித ஸம்மந்தமும் கிடையாது. ஸம்ஸ்காரங்களுக்கும் மதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமே கிடையாது. இவற்றினால் மதத்தின் உண்மைதத்துவம் மாறிவிடுமென்று சொல்வது ஸரியாகாது என்கிறார்.

இங்கு என்ன கூறலாம்? அய்யங்காரவர்கள் சீமைக்குப் போய்விட்டு வீட்டுக்குள்போய் சற்று இளைப்பாறினபிறகாவது வந்து பேசியிருந்தால் இவ்விதம் பேசவேமாட்டார்கள். நம் வீட்டு நிழல்பட்டு நம் ஸந்ததியையும் பார்த்து மனம் குளிர்ந்திருக்கும் இருக்கட்டும், கூறியதைக் கவனிப்பாம்.

விவாஹத்திற்கும் ஆன்மசுத்திக்கும் ஒருவித ஸம்மந்தமும் கிடையாது! என்பது நியாயமே இல்லை. ஆன்மசுத்தி என்றால் தேகசுத்தியா, சித்தசுத்தியா இரண்டிற்கும் விவாஹம் சாஸ்திரப் படி நடவாவிட்டால் கெட்டுப்போம்.

कुविवाहैः क्रियालोपैर्वेदानध्ययनेन च ।
कुलान्यकुलतां यान्ति ब्राह्मणातिक्रमेण च ॥

குவிவாஹை: க்ரியாலோபைர் வேதாநத்யயநேந ச ।
குலாந்யகுலதாம் யாந்தி ப்ராஹ்மணாதிக்ரமேண ச ॥

கெட்ட விவாஹங்களாலும் க்ரியைகளை விடுதலாலும் ப்ராம்மணர்களை மீறுவதாலும் குலம் கெட்டுப்போம் என்று மனு கூறினர்.

चित्तस्य शुद्धये कर्म न तु वस्तूपलब्धये ।

சித்தஸ்ய ஶுத்தயே கர்ம ந து வஸ்தூபலப்தயே ।

கன்மாவென்பது சித்தசுத்திக்காக எற்பட்டது. வஸ்துவை அடைவதற்காகவில்லை என்றதானல் வஸ்துவை அடைவது சித்தசுத்திமூலம்தான் என்றும், சித்தசுத்திக்குக் கன்மம் மூலமென்றதனுலும் விவாஹம் முதலிய கன்மா 48 கன்மாக்களுள் முக்கியமானதாலும் ஸம்ஸ்காரத்திற்கும் ஆன்மசுத்திக்கும் இணையற்ற பொருத்தமுண்டு. ஆகவெ ஸம்ஸ்காரத்திற்கும் மதத்திற்கும் இன்னும் ஒப்பற்ற பொருத்தமுண்டென்றும் தெரிந்துகொள்ள வேண்டும். தவிற ஸம்ஸ்காரமில்லாமல் மதமே கிடையாதென்பதை அவசியம் அறியவேண்டும். கிறிஸ்தவர் மகம்மதியர்களது மதங்களிலும் அததற்குரிய ஸம்ஸ்காரங்களுண்டு.

இனி வைதிகர்களைத் திட்டவேண்டாமென்று கூறிவிட்டு அவர்கள் இந்துமதத்தைச் சுத்தப்படுத்திச் சர்வ வியாபகமாய் செய்ய முடிந்தால் செய்யட்டும். அவர்களால் முடியாத பக்ஷத்தில் சிறுவர்கள் செய்வதைத் தடுக்கவேண்டாமென்றே வைதிகர்களை நான் கேட்டுக்கொள்கிறேன் என்கிறார்.

இவ்வசனம் ஸர்வவியாபகனை ஈசனை சுத்தம் செய்கிறேனென்றும் நிர்மலமான ஆஹாயத்தை சுத்தம் செய்கிறேனென்றும் கூறுபவனது பேச்சுப்போலிருக்கிறது. இந்து மதத்திற்கு அசுத்தமுண்டா. ஆன்மாவை அறியவேண்டுமாயின் சித்தத்தை சுத்தி செய். சாஸ்திரத்திற் கூறிய ஸம்ஸ்காரங்களைச் சரிவரச் செய்துகொள். அப்போது எங்கும் வியாபித்த ஆன்மப் பொருளை அறிவாய் என்றுதான் சாத்திரங்கள் கூறுமேயல்லாது ஆன்மாவின் அசுத்தத்தை விலக்கவும் ஆன்மாவை ஸர்வ வியாபகனுய்ச் செய்யவும் சாத்திரம் கூறுது. ஏனெனில் ஆன்மா எப்போதும் நிர்மலன். ஸ்ர்வவியாபகன். அவ்வித ஆன்மாவைக் காண உன் கண் தோஷத்தை விலக்கத்தான் மருந்து அதுபோல் இந்துமதம் அசுத்தமன்று. அதை ஸர்வ வியாபகமாய் நாம் செய்ய வேண்டியதில்லை. நம் மனதிலிருக்கும் அசுத்தத்தை விலக்க நாம் ஸம்ஸ்காரம் செய்யவேண்டியிருக்க அய்யங்காரவர்கள் யாதோ கூறுகின்றனர். தவிற அதைச் செய்ய முன்வரும் சிறுவர்களைத் தடுக்க வேண்டாமென்கிறுர். இது நியாயமா. சந்திரனைப் பிடிப்போமென்று நகர்ந்து ஓடும் நம் குழந்தைகளை நாம் தடுத்து அவர்களுக்கு ஹிதோபதேசம் செய்யவேண்டாமா. அப்படிச் செய்யாவிடில் குழந்தை எங்காவது விழுந்து கை கால்களை முறித்துக் கொண்டு அலறித் தவிக்காதா. அதுபோல் மஹரிஷிகளால் அறிய முடியாத மத தத்துவத்தில் தாறுமாராய் ஆரமபிக்கும் குழந்தைகளை நாம் தடுக்காமல் போனல் அவர்களும் கெட்டு வம்சத்தையும் பாழாக்கி விடுவார்களென்பதைச் சற்று கவனிக்கவேண்டும். ஆகவே பெரியோர்கள் தர்மப்படி நடக்கவில்லையென்று சிறுபிள்ளைகள் ஆரம்பிப்பது அனர்த்தமாய் முடியுமாதலால் அவர்களிஷ்டப்படி விடாமல் தடுத்து சத்குருக்களை அண்டிச் சரணமடையச் செய்யவேண்டியதே நமது கடமை.

இம்மகாநாட்டின் மூலம் நீங்கள் செய்யும் சில வேலைகளில் நான் அபிப்பிராயபேதம் கொண்டிருக்கிறேன். முதலாவது சமூகசீர்திருத்தங்கள்சட்டமூலமாகநிர்ப்பந்திக்கப்படக் கூடாது அதிலும் அன்யகவர்ன்மெண்டும் வேற்று மதத்தினரும் அடங்கியுள்ள சட்ட சபைகளில் இத்தகைய சட்டங்கள் இயற்றப்படக் கூடாது என்கிறுர்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் அச்சிறுவர்கள் ஸபை நடுங்கியிருக்கும் வைதிகன் யாராவதிருந்து கேட்டுக்கொண்டிருந்தால் மிகவானந்தமடைந்திருப்பான். இனி அடுத்துவரும் வார்த்தையை கவனியுங்கள்.

இருந்தாலும் நியாயமும் அவசியமுமான சட்டங்களுக்காகச் சட்டஸபையில் மசோதாக்கள் வந்தால் அவற்றை நான் எதிர்க்கவும் முடியாது. உண்மையாகவே நல்லதென்று தோன்றும் எம்மசோதாவையும் நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ருர்.

இதனுல்தான் அய்யங்காரவர்கள் தேவஸ்தானதர்ம மசோதாவை ஆதரித்தார். பிரகிருத விவாஹவிஷயம் ரத்துவிஷயம் முதலிய யாவையும் ஆதரிக்கிருர் போலும். ஏனெனில் இவ்வளவும் இவர்களுக்கு உசிதமென்று பட்டுவிட்டது. பாருங்கள் சட்டசபையில் கொண்டுவரக் கூடாதென்ருர். வந்ததை ஆதரிப்பேனென்கிருர். இவ்விதம் லௌகிகக் கடலில் மூழ்கின அய்யங்காரவர்கள் முன்பின் விரோதமாய் பேசுவதாய் எண்ண முடியாது. தெரிந்துதான் இது ஒரு சாதுர்யமென்று பேசக்கூடும்.

இனி கடைசியாக அய்யங்காரவர்கள் கூறும் ஸாரத்தைக் கூறிமுடித்து விடுகிறேன்.

பால்ய விவாஹத்தடைமசோதா மிக அவசியம். தங்களுடைய சரீர இச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஒரு சிசுவையா அபேக்ஷிக்கக் கூடும் என்று விளக்குகிருர்.

இங்கு அய்யங்காரவர்கள் சரீர இச்சையைப்பூர்த்தி செய்துகொள்வதற்குத்தான் கல்யாணம் என்று இந்து மதத்தில் தனது நுட்ப புத்தியினுல் தெரிந்துகொண்டதைப் பற்றி மெச்சவும் இதைத் தெரிந்துகொள்ளாமல் யோசனை இல்லாமல் பால்ய விவாஹத்தை விதித்த சாஸ்திரங்களை இகழவும் வேண்டும்போலிருக்கிறது,

நமது ஜாதி வித்யாஸம் பிரயோசனமில்லையாம். இது நமது தாராளபுத்திக் குறைவினுல் ஏற்பட்டதாம்.

ஸ்மிருதிகளில் பற்பலருடைய அபிப்பிராயங்களும் கொள்கைகளும் அடங்கியிருப்பதனுல் அவற்றைத் தற்கால நடத்தை

க்கு ஆதாரமாகக்கூறுவது அசட்டுத் தனமாகுமாம். பிறகுதேவ தாசிகள் விபசாரப் பிழைப்பிற்காக ஏற்பட்டிருப்பதாய்த் தமது ஐரோப்பா யாத்திரையில் தெரிந்துகொண்டனராம். இதை நிவர்த்திக்க யோசனை செய்கிறார்களாம்.

கடைசியாய் அய்யங்காரவர்களின் அபிப்பிராயத்தைச் சேர்த்து மீண்டும் எழுதுகிறேன். பால்ய விவாஹம் தடுக்கப்படவேண்டும். வர்ணாச்ரமதர்மம் துலையவேண்டும். ஸ்மிருதிகளை கிழித்தெரியவேண்டும். தேவதாசிகளை ஒழிக்கவேண்டுமென்பதே

இனி இது விஷயமாய் சட்டசபையிலும் தாராளமாய் வேலை செய்வார்கள். ஆனால் இதைத் தவிர இந்துமதத்திற்கு ஜீவாதாரமான தர்மம் எதிருக்கிறது. எந்த தர்மத்தைச் சட்டசபையில் எதிர்க்கப் போகிறார்கள்.

இனி வைதிகர்கள் தம் மதத்தைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமென்று ஸைமன்கமிஷனிடம் சென்று கெஞ்சவேண்டாமென்று வற்புறுத்துகிறேன் என்கிறார்கள்.

இனி நாங்கள் யாது செய்வது வைதிகமத ரக்ஷகர்களான ஆசார்யர்களை லக்ஷ்யம் செய்யாது வைதிகமதத்தை வேரில்லாமல் களைய இவர்கள் முன்வரும்போது எங்களுக்கு யார்தான் சரணமடையத் தக்கவரோ என்று தத்தளிக்கிறோம்.

கடைசியாய் ஒரு வார்த்தை கூறுகின்றேன். ஹிந்துதர்மபரிபாலனஸபை என்று புதிதாய் ஒன்று வேண்டுமா? இவர்கள் செய்யப்போகும் வேலையை ஆர்யஸமாஜிகள் செய்துவருகின்றனர். ஆகவே ஆர்யஸமாஜத்தின் கிளை என்றே கூறலாம். அப்படிக் கூறினால் சிலர் பேசமாட்டார்களென்று வஞ்சிப்பதற்காக இப்பெயரிட்டிருக்கலாம்.

இவ்விதம் பேசினபிறகு ராமதாஸ் அவர்கள் இதற்கு ஒருபடி உயர்ந்தே பேசிவிட்டார்கள். ஸ்ரீனிவாஸய்யங்காரவர்கள் சட்டமூலம் ஒன்றும் வேண்டாமென்று சொல்லிவிட்டதாய் எண்ணிக்கொண்டு சட்டமூலம்தான் செய்யமுயலவேண்டும். அவர்கள்போல் பொறுமையாய்ப் போகமுடியாதென்றும் தேவதாஸிவிஷயத்தில் அய்யங்காரவர்கள் யோஜிக்கவேண்டாம். அவர்களுக்குக் கோயில்களிற் கொடுக்கப்பட்டிருக்கும் ஸர்வமான்யத்தை அவர்களுக்கே கொடுத்துவிடும்படி சட்டமியற்ற

வேண்டுமென்றும் கூறிவிட்டனர். என்ன செய்யலாம் சட்டம் அவர்களிஷ்டப்படி ஓடும்.

இவ்விதமெல்லாம் வாய்கூசாமல் பேசுபவர்கள் தங்கள் மனப்படி இந்துமதத்தை ஸ்ருஷ்டித்து அதற்கு இந்துமதம் எனப் பெயரிடப்போகிறார்களாம். இவ்விதமெல்லாம் இவர்கள் மனப்படி ஸ்தாபித்து நாட்டில் குழப்பமில்லாமல் இவர்கள் புதிய மதானுஷ்டானத்தைப் பரவச்செய்து அமைதியாய் இருப்பதை இம்மேதாவிகள் பார்த்து ஸந்தோஷிக்கும்படி இவர்களது புது தெய்வம் அனுக்ரஹம் செய்யட்டும்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரியள்.

---

# புராணதத்வவிமரிசம்.

புராணம் என்பது மூன்று காலங்களையும் எடுத்துரைத்து பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரையில் எளிதில் தெரிந்துகொள்ளும்பொருட்டு ஆதிகாலத்தில் அரண்ணியங்களில் தபஸ் பண்ணிக்கொண்டிருந்த மஹரிஷிகளால் நமக்கு அனுக்கிரஹிக்கப்பட்டது. அவற்றின் சங்கியை பதினெட்டு. இதைத் தவிர உப புராணங்கள், தற்மசாஸ்திரங்கள், ஸ்ரீமத்ராமாயணம், மஹாபாரதம், முதலிய அனேகம் கிரந்தங்கள் வடமொழியிலேயே ஏற்பட்டிருந்ததை அந்தந்த தேசபாஷைக்கேற்றவாறு மொழிபெயர்த்திருக்கிறார்கள். இந்தப் புராணங்கள் இல்லாவிட்டால் பூகோள ககோள நிர்ணயம், மஹரிஷிகளின் சரித்திரம், ஜனங்களின் நடை, உடை, தர்மம், புண்ணியம், பாபம், அதன் பலன்கள் ஒன்றுமே நம்மால் அறிந்துகொள்ள முடியாது. ஆடு மாடுகள்போல்தான் இருந்திருப்போம். தற்காலம் உலகத்திலுள்ள ஸகல ஜனங்களுக்கும் நாகரீகத்தை கற்பித்துக் கொடுக்கும் ஆசாரியாள் எனத் தங்களை பெருமைப்படுத்திக்கொள்ளும் சில ஜனங்களின் முன்னோர்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் தழைகளைத்தரித்துக்கொண்டு இருந்தார்கள் என்று அவர்களின் சரித்திரங்களே முறையிடுவதாக நாம் கேள்விப்படுகிறோம். அப்படி ஏதாவது நம்முடைய புராணங்கள் முன்னோர்களின் பழக்கவழக்கங்களை இழிவாகவோ, நாகரீகமல்லாததாகவோ கூறியிருக்கிறதா. இப்படிப்பட்ட புராண

ரத்தினங்களை நமக்கருளிய முன்னோர்களான மஹரிஷிகளை நிமிஷம்தோறும் கணக்கற்ற நமஸ்காரங்களால் வணங்க வேண்டாமா.

सर्गश्च प्रतिसर्गश्च वंशमन्वन्तराणि च ।
वंशानुचरितं चैव पुराणं पंच लक्षणम् ॥

ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச வம்ஶமந்வந்தராணி ச ।
வம்ஶாநுசரிதம் சைவ புராணம் பஞ்சலக்ஷணம் ॥

பிரதி புராணங்களிலும் பிரபஞ்ச உற்பத்தி பிறகு உண்டான சிருஷ்டி ரிஷிகளின் வம்சம் மங்வந்தரங்கள் வரப்போகும் ராஜவம்சம் உலகத்தின் முடிவு முதலிய ஸகலத்தையும் சொல்லப்படுவதால் புராணம் ஐந்து லக்ஷணங்களுள்ளது என்று பெயர்.

தேவர்கள், ராக்ஷஸர்கள், ஜனங்கள், பாதாளவாஸிகள் முதலிய ஸகலருக்கும் வித்தை என்பது உயிர் போன்றது. அதன்றியில் ஒன்றும் பிரயோஜனப்படாது என்பது பிரஸித்தம். அப்படிப்பட்ட வித்தைக்குக் காரணங்கள் பதினான்கு

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसान्यायविस्तरः ।
पुराणं धर्मशास्त्रं च विद्याह्येताश्चतुर्दश ॥

அங்காநி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸாந்யாயவிஸ்தர: ।
புராணம் தர்மஶாஸ்த்ரம் ச வித்யாஹ்யேதாஶ்சதுர்தஶ ॥

வேதம். ரிக், யஜுஸ், ஸாமம். அதர்வம் என நான்கு.

शिक्षा व्याकरणं छन्दो निरुक्तं ज्योतिषं तथा ।
तर्कश्चेति षडङ्गानि वेदस्याहुर्मनीषिणः ॥

ஶிக்ஷா வ்யாகரணம் ச²ந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா ।
தர்கஶ்சேதி ஷடங்காநி வேதஸ்யாஹுர்மநீஷிண: ॥

சிக்ஷை, வ்யாகரணம், (இலக்கணம்) சந்தஸ், நிருக்த சாஸ்திரம், ஜோதிஷம், தர்க்கம்,என வேதாங்கங்கள் ஆறு. மீமாம்ஸா நியாய சாஸ்திரம், புராணங்கள், தற்மசாஸ்திரங்கள் ஆக பதினான்கும்வித்தைக்கு இன்றியமையாததே, வேதம் என்பது. ஒருவராலேயும் செய்யப்படாதது. முன்னோர்கள் அதிலிருந்து பொருக்கி எடுத்து திராக்ஷாபாகமாக மாற்றிப் புராணங்களாகவும்தர்மசாஸ்திரங்களாகவும் எழுதி வைத்திருக்கிறார்கள், மஹாகவியான காளிதாஸரும்

வேதத்தை (அபௌருஷேயம்) ஒருவராலேயும் செய்யப்படாதது என்று ராமாயண சம்பு கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார். இது (வேதவாக்கா என்ன) என்று தமிழ்நாட்டுப் பழமொழியில் வழங்கி வருவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். வேதத்தை சில இந்துக்களும் அன்னிய மதஸ்தர்களும் வெகு காலத்துக்கு முன் ஏற்பட்டதென்று சொல்லுகிறார்களே ஒழிய எக்காலத்தில் யார் ஏற்படுத்தினர் என்று நாளதுவரையில் ஒருவரும் திட்டமானமுடிவுக்குவந்ததாகத்தெரியவேயில்லை. அப்படிப்பட்ட வேதங்களில்பல விடங்களில் இதிஹாஸங்களையும், புராணங்களையும்பற்றிக் கூறியிருக்கிறது. வேதங்களாலேயே சூழப்பெற்ற புராணங்களின் மஹிமையை அவசியம் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது. வேதத்தை அனுதியென்று நிரூபித்துவிட்டுப்புராணங்கள் வேதங்களில் கூறப்படுவதால் வேதங்களுக்கு சிலரால் ஒரு குறை கற்பிக்கப் படலாம். வேதம் த்ரிகாலங்களையும் சொல்லக் கூடியது. என்பதை விசாலமான திருஷ்டியுள்ளவர்கள் சுலபமாய் கண்டறிவார்கள். இதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதவசியமன்று. புராணம் என்பது ஸாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்று மூவகைப்படும். புராணங்கள், விஷ்ணுபுராணம், ஸ்காந்தம், காருடம், நாரதீயம், என்று பலவகைப்பட்டதாயிருந்தாலும்

अष्टादशपुराणानां कर्ता सत्यवतीसुतः ।

அஷ்டாதஶ புராணானாம் கர்த்தா ஸத்யவதீஸுத: ।

பதினெட்டு புராணங்களுக்கும் கர்த்தா வியாஸபகவான் என்று சொல்லியிருக்கிறது. இந்த புராணங்களிலும் வேதங்களிலும் வர்ணாச்ரமதர்மம், பதிவ்ருதா மாஹாத்மியம் ஸத்யம் முதலிய ஸகலமும் கூறப்பட்டிருக்கிறது. வேதவ்யாஸ மஹரிஷியால் இயற்றப்பட்ட பிரம்மஸூத்ரத்துக்கு பாஷ்யமியற்றிய ஆதிசங்கர பகவத்பாதாசாரியாளாவது, ராமானுஜாசாரியாராவது, மத்வாசாரியாராவது புராணங்களையும், தற்மசாஸ்திரங்களையும், குறை கூறி உபதேசித்திருக்கிறார்களா? இந்துமதஸ்தன் எனத்தன்னை நினைத்துக் கொள்ளும் ஒவ்வொருவரும் இம்மூன்று மஹான்களில் ஒருவரை ஆசாரியனுக வழிபடாதவர் கிடையாது. வேதபாஷ்யாளைப் பற்றி நாம் விசாரிக்கவேண்டியதவசியமேகிடையாது.

(தொடரும்) தி. ந. தாததேசிகாசாரியார்.

H 79



13, 14, राश्यन्तर, वर्गघातयोः, राश्यन्तर, वर्गभागहारयोश्च ज्ञातयोः पूर्वोक्तप्रकारद्वयविलोमविधानेन राशिद्वयज्ञानोपायप्रकारद्वयमुक्तं वेदितव्यम् । अथ राश्योर्घाते वर्गयोगे च दृष्टे राशिद्वयावगमाय करणसूत्रं वृत्तार्धम् ।

(15) द्विनिघ्नघातोनितवर्गयोगान्मूलं वियोगं प्रवदन्ति सन्तः ।

उदाहरणम्— राशिद्वयस्य हति रर्ककुलाद्रिसंख्या कृत्योर्युति श्शरकरिग्रहवारतुल्या । यस्यैव पेशलमते ! समयेन जाता तद्राशियुग्ममभिधेहि सखे ! पृथक्त्वम् ॥

न्यासः—राश्योर्हतिः, समयेन = गणिताचारेण, जाता, $यक = 712$, वर्गयोगः, $य^{2} + क^{2} = 7985$, द्विगुणितहत्या, $2 \times यक = 2 \times 712 = 2यक = 1424$, अनया वियुक्तस्य वर्गयोगस्य, $य^{2} + क^{2} — 2यक = 7985 — 1424 = 6561$, अस्य मूलं, $य — क = 81$, इदं राश्यन्तरं, पुनरपि "वेदघ्नघातान्तरे"ति सूत्रेण वेदघ्नघातः, $4 \times यक = 4 \times 712 = 4यक = 2848$, अस्यान्तर, 81, वर्गेण, 6561, अनेन युतस्य, $य^{2} + क^{2} — 2यक + 4यक = 2848 + 6561 = य^{2} + क^{2} + 2यक = 9409$, अस्य मूलं, $य + क = 97$, अयं राशियोगः, पुनरपि योगान्तराभ्यां पूर्ववज्जातौ राशी, 89, 8,

राश्योर्घाते वर्गान्तरे च दृष्टे राशिद्वयावगमाय सूत्रं वृत्तार्धम् ।

(16) वर्गान्तर,द्विघ्नवधो,स्थकृत्यो स्संयोगमूलं कृतियोगमाहुः ।

उदाहरणम्— राश्योर्घातस्तु षट्त्रिंश,त्तद्वर्गविवरं सखे ।
पञ्चषष्टि,रमान्येन वद राशी विशारद ॥

न्यासः— राशिघातः, $यक = 36$, वर्गान्तरं, $य^{2} — क^{2} = 65$, वर्गान्तरकृतिः, $(य^{2} — क^{2})^{2} = 65^{2} = य^{4} — 2य^{2}क^{2} + क^{4} = 4225$, द्विघ्नघातकृतिः, $(2यक)^{2} = (2 \times 36)^{2} = 4य^{2}क^{2} = 5184$, अनयोर्योग $य^{4} — 2य^{2}क^{2} + क^{4} + 4य^{2}क^{2} = 4225 + 5184 = 9409$, मूलं, $य^{2} + क^{2} = 97$, अयं वर्गयोगः, आभ्यां वर्गयोगान्तराभ्यां वर्गौ साध्यौ, 81, 16, अनयोर्मूलराशी, 9, 4,

H-80



राशिभक्तफले राश्योर्वर्गयोगे च दृष्टे राशिद्वयावगमाय सूत्रम् ।

(17) "च्छेदफलाभ्या"मिति पूर्वमेवोक्तम् ।

अत्रोदाहरणम्—राश्योरेकेनैके (१) भक्ते लब्धं निधिप्रमाणं तत् ।
तद्वर्गयोगराशिर्वसुनेत्रकृशानुसंमितो वद तौ ॥

न्यासः—राश्योरेके (नैके) नान्यस्मिन् भक्ते लब्धं, $\frac{य}{क}=9$, राश्योर्वर्गयोगः, $य^2+क^2=328$, अत्र भक्तफले च्छेदसहिते स्थिते, $\frac{9}{1}$, अनयोश्छेदफलयोर्वर्गयोगः, 82, अनेन वर्गयोगे भक्ते जातं फलं, 4, अस्य मूलेन, 2, अनेन पूर्वजातफलस्य च्छेद्ये च्छेदके च गुणिते जातौ राशी, 18, 2,

अत्रास्मदीयं सूत्रम्- सैकेन भागहारोत्थफलवर्गेण भाजितात् ।
वर्गयोगात्पदं यत्, स लघु, ज्ञेयोऽपरस्ततः ॥

उक्तोदाहरणार्थं न्यासः, भागहारोत्थफलं, $\frac{य}{क}=9$, अस्य वर्गेण, $\frac{य^2}{क^2}=81$, सैकेन, $\frac{य^2}{क^2}+1=81+1=\frac{य^2+क^2}{क^2}=82$, अनेन भाजिताद्वर्गयोगात्, $य^2+क^2\div\frac{य^2+क^2}{क2}=\frac{(य^2+क^2)क^2}{(य^2+क^2)}=क^2=\frac{328}{82}=4$, अस्मान्मूलं, $क=2$, अयं लघुराशिः, अनेन गुणितं भागहारफलं, $\frac{य}{क}\times क=9\times 2=य=18$, अयं बृहद्राशिरिति जातौ राशी, 18, 2,

राशिभक्तफले राश्योर्वर्गान्तरे च दृष्टे राशिद्वयावगमाय सूत्रम् ।

(18) "च्छेदफलाभ्या"मिति पूर्वोक्तमेव ।

अत्रोदाहरणम्—राश्योरेकेनैके (१) भक्ते लब्धं शरप्रमाणं तत् ।
तद्वर्गद्वयविवरं षण्णवतिमितं वदाशुराशियुगम् ।

न्यासः—राश्योरेके (नैके) नान्यस्मिन् भक्ते फलं, $\frac{य}{क}=5$, तद्वर्गविवरं, $य^2-क^2=96$, अत्र भक्तफले सच्छेदे स्थिते, $\frac{5}{1}$, अनयोर्वर्गविवरं, 24, अनेन राशिवर्गविवरे भक्ते जातं फलं, 4, अस्य मूलेन, 2, अनेन पूर्वजातफले तच्छेदे च गुणिते जातौ राशी, 10, 2,

---

(१) अत्र "एके" इति सप्तम्यन्तप्रयोगश्चिन्त्यः ।

द्येकेन भागहारोत्थफलवर्गेण भाजितात् ।

वर्गान्तरात्पदं यत् , स लघु, ज्ञेयोऽपरस्ततः ॥

इतीदमस्य पर्यवसानं, न्यासस्तु पूर्वोक्तरीत्या विशदः ।

राश्योर्वर्गान्तरे वर्गयोगे च दृष्टे राशिद्वयावमाय सूत्रं वृत्तार्धम् ।

(19) कृत्योस्समासान्तरसंक्रमेण वर्गौ, तयोर्मूलयुगं तु राशी ।

उदाहरणम्– राश्योर्वर्गयुतिर्दृष्टा पञ्चाशीतिस्तयोरपि ।

वर्गान्तरं विश्वमिदं तौ राशी वद सत्वरम् ॥

न्यासः, राश्योर्वर्गयोगः, 85, वर्गान्तरं, 13, "योगोऽन्तरेणे"ति सूत्रेण पृथग्वर्गौ जातौ, 49, 36, अनयोर्मूलयुगं, 7, 6, राशी,

वर्गयोगे वर्गघाते च दृष्टे राशिद्वयज्ञानायास्मत्कृतं सूत्रम् ।

(20) वर्गघातस्य मूलेन द्विगुणेन युतात्पदम् ।

वर्गयोगाद्राशियोगो राशी ज्ञेयावथोक्तवत् ॥

उदाहरणम्– वर्गयोगः पञ्चषष्टिः वर्गघातो ययोस्सखे ।

वेद नागाद्रितुल्यस्स्यात् तौ राशी कथय द्रुतम् ॥

न्यासः, वर्गयोगः, $य^2+क^2=65$, वर्गघातः, $य^2क^2=784$, वर्गघातस्य मूलेन, $यक=28$, द्विगुणेन, $2यक=56$, युताद्वर्गयोगात् $य^2+क^2+2यक=65+56=121$, मूलं, $य+क=11$, अयं राशियोगः । राशियोगे राशिवर्गयोगे च ज्ञाते प्रोक्तप्रकारेण वा, राशियोगे राश्योर्वर्गघाते च ज्ञाते प्रोक्तप्रकारेण वा जातौ राशी, 7, 4,

अत्र संक्रमणे विंशतिः प्रभेदा उक्ताः । तत्र द्वौ भेदौ मूलकारैरुक्तौ । अन्ये त्रयोदश भेदाः कर्मप्रदीपिकाकारैरुक्ताः । तथा च तद्वाक्यं—"अत्र राश्योर्योगान्तराभ्यां राश्योरन्तरवर्गान्तराभ्यां चोक्तं संक्रमणकर्म लीलावत्यामेव दृष्टम् । अन्ये त्रयोदश प्रभेदा श्शास्त्रान्तरदृष्टा एव । तेषां गणितयुक्तिप्रकाशकत्वादादायास्मिन्व्याख्याने यथाक्रमं लिखिताः । पुनरपि घनसंबन्धिसंक्रमभेदास्त्रयोदशविकल्पिता स्सन्ति । तेचात्र ग्रन्थविस्तरभयान्न लिखिताः" इति ॥ अवशिष्टाः पञ्चप्रभेदा अस्मदाचार्योपदेशतोऽस्माभिर्निरूपिता इति ज्ञेयम् । इति संक्रमणम् ॥

अथ किञ्चिद्वर्गकर्म प्रोच्यते । तत्राऽऽर्याद्वयम् ।

इष्टकृतिरष्टगुणिता व्येका दळिता विभाजितेऽष्टेन ।
एकः स्यात्, अस्य कृतिर्दळिता सैकाऽपरो राशिः ॥ ५६ ॥
रूपं द्विगुणेष्टहृतं सेष्टं प्रथमोऽथवा परो रूपम् ।
कृतियुतिवियुती व्येके वर्गौ स्यातां यथो राश्योः ॥ ५७ ॥

उद्देशकः— राश्योर्ययोः कृतिवियोगयुती निरेके
मूलप्रदे प्रवद तौ मम मित्र यत्र ।
क्लिश्यन्ति बीजगणिते पटवोऽपि मूढाः
षोढोक्तबीजगणितं परिभावयन्तः ॥ ५८ ॥

न्यासः, अत्र प्रथमानयने कल्पितमिष्टं, $\frac{1}{2}$, अस्य कृतिः, $\frac{1}{4}$, अष्टगुणिता $\frac{1}{4}\times 8=2$, व्येका, $2-1=1$, दळिता, $\frac{1}{2}$, इष्टेन, $\frac{1}{2}$, अनेन विभाजिता, $\frac{1}{2}\div\frac{1}{2}=\frac{1}{2}\times\frac{2}{1}=1$, प्रथमो राशिः । अस्य कृतिः, 1, दळिता, $\frac{1}{2}$, सैका, $\frac{1}{2}+1=\frac{3}{2}$, अयमपरो राशिः । एवं जातौ राशी, 1, $\frac{3}{2}$, एवमेकेनेष्टेन $\frac{7}{2}$, $\frac{57}{8}$, द्विकेन, $\frac{31}{4}$, $\frac{993}{32}$, अथ द्वितीयप्रकारेणेष्टं, 1, अनेन द्विगुणेन रूपं भक्तं, $\frac{1}{2}$, इष्टेन सहितं $\frac{1}{2}+1=\frac{3}{2}$, जातः प्रथमो राशिः द्वितीयो रूपमेव, 1, एवं राशी, $\frac{3}{2}$, $\frac{1}{1}$, एवं द्विकेनेष्टेन, $\frac{9}{4}$, $\frac{1}{1}$, त्रिकेण, $\frac{19}{6}$, $\frac{1}{1}$, त्र्यंशेन, $\frac{1}{3}$, जातौ राशी, $\frac{11}{6}$, $\frac{1}{1}$,

यद्यपीदं वर्गकर्म केवलबीजक्रियया साध्यं, तथापि विनैवाऽव्यक्तक्रियां व्यक्तगणितेनापि लघुकर्मणा साधयितुं शक्यत इति स्वकौशलं दर्शयन् वर्गकर्माऽऽह—इष्टकृतिरित्यादिद्वाभ्याम्— प्रथमं किञ्चिदिष्टं परिकल्प्य, इष्टकृतिः=तस्येष्टस्य वर्गः, अष्टगुणिता=अष्टभिर्गुणिता, व्येका=एकोना, दळिता=अर्धिता, इष्टेन=पूर्वकल्पितेन, विभाजिता=विभक्ता एको राशिः स्यात् । अथास्य राशेः, कृतिः=वर्गः, दळिता=अर्धिता, सैका=एकसहिता, अपरो राशिः स्यात् । अत्र प्रकारान्तरमाह=रूपमिति—अथ वा रूपं=एकसंख्या, द्विगुणेष्टहृतं=द्विगुणितेनेष्टेन विभक्तं,